Thinakkural [18/1/17]

# யாழ்ப்பாணத்தில் உணர்வுபூர்வமாக எம்.ஜி.ஆரின் 100 ஆவது பிறந்ததினம்

## இலங்கை வழங்கிய 'கொடை' யென கூறுகிறார் இந்திய துணைத்தூதுவர்

தமிழ்த் திரை உலகிலும் தமிழக அரசியலிலும் ஆதிக்கத்தைச் செலுத்தியிருந்த மறைந்த தமிழக முதல்வர் எம்.ஜி.ராமச்சந்திரனின் நூறாவது பிறந்த தின நிகழ்வு யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்நகரில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்திய துணைத் தூதுவர் ஏ.நடராஜன் கலந்துகொண்டார். எம்.ஜி.ஆர். சிலை அருகே இடம்பெற்ற இந்நிகழ்வை சுந்தரலிங்கம் ஏற்பாடு செய்திருந்தார். 1967 இல் அவரின் சக நடிகரும் அரசியல் எதிராளியுமான எம்.ஆர்.ராதாவினால் சுடப்பட்டு எம்.ஜிஆர். காயமடைந்திருந்த காலம் தொட்டு சுந்தரலிங்கம், எம்.ஜி.ஆருடன் பிணைப்பைக் கொண்டிருந்தவர். வறிய மக்களின் நலனோம்பலில் எம். ஜி.ஆர். கொண்டிருந்த அக்கறையினால் கவரப்பட்ட சுந்தரலிங்கம் எம்.ஜி.ஆரின் பிறந்த தினத்தில் வருடா வருடம் யாழ்ப்பாணத்திலுள்ள ஏழை மக்களுக்கு பணம் மற்றும் உடைகளை வழங்கி வருகின்றார். எம்.ஜி.ஆர். போன்றே கறுப்பு நிற கண்ணாடிகளுடன் காணப்பட்ட சுந்தரலிங்கம் அதிகமாக பேசாதவர். பேச்சிலும் பார்க்க செயலில் அவர் நம்பிக்கையுடையவர். ஈழத்தின் எம்.ஜி.ஆர். என அறியப்படுகின்றார்.

**இலங்கையிலிருந்து கிடைத்த கொடை'**

இந்நிகழ்வில் உரையாற்றிய இந்திய துணைத் தூதர் நடராஜன், இந்தியாவிற்கு இலங்கை வழங்கிய கொடை என எம்.ஜி.ஆரை வர்ணித்துள்ளார். இலங்கையின் மத்திய நகரமான கண்டியில் எம்.ஜி.ஆர். பிறந்தவர். ஏழைகள் தொடர்பான எம்.ஜி.ஆரின் கரிசனைகள் பற்றி குறிப்பிட்ட நடராஜன், திரைப்படத்தில் அவர் நடித்த பாத்திரங்களில் மாத்திரமன்றி உண்மையான அவரின் வாழ்விலும் இது பிரதிபலித்தது என்று கூறியுள்ளார். அரசியல்



தலைவராகவும் தமிழகத்தின் மக்கள் செல்வாக்கு மிக்க முதலமைச்சராகவும் எம்.ஜி.ஆர். விளங்கியதுடன், அவரின் ரீல் (திரைப்பட) மற்றும் ரியல் (யதார்த்த) வாழ்க்கை ஒரே விதமாக இருந்தது என்று நடராஜன் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அரசியலில் பிரவேசித்து பிரபல்யமான தலைவராக திரைப்பட நட்சத்திரங்கள் வருவதற்கான புதிய வழியை காண்பித்தவர் எம்.ஜி.ஆர். எனவும் நடராஜன் குறிப்பிட்டிருக்கிறார். எம்.ஜி.ஆருக்கு பின்னரே றொனால்ட் றீகன் அரசியல் கட்சித் தலைவராகவும் அமெரிக்க ஜனாதிபதியாகவும் வந்துள்ளார். இந்தியாவிலும் கூட எம்.ஜி.ஆருக்கு பின்னரே பல நடிகர்கள் தலைவர்களாகியுள்ளனர். ஆந்திரப் பிரதேசத்தின் முன்னாள் முதலமைச்சர் என்.ரி.ராமராவ் மற்றும் பல நடிகர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களாகி உள்ளனர்.

நூறாவது பிறந்தநாள் வைபவத்தில் வட மாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

எம்.ஜி.ஆர். உடன் இலங்கைத் தமிழர்களை நெருக்கமாக்கிய இனப் பிரச்சினை

இலங்கைத் தமிழர்கள் மத்தியில் எப்போதுமே திரைப்பட நடிகராக ஆகர்ஷிக்கப்பட்டிருந்த எம்.ஜி.ஆர். 1980 களின் முற்பகுதியில் ஈழத் தமிழ் இயக்கத்திற்கு ஆதரவளிக்க ஆரம்பித்ததைத் தொடர்ந்து தமிழர்களின் இதயத்தில் இடம்பிடித்தார். இலங்கைத் தமிழர்கள் எம்.ஜி.ஆரை அவரின் தமிழக அரசியல் எதிராளி மு. கருணாநிதியுடன் ஒப்பிடும் போது அதிகளவுக்கு இதயசுத்தியுள்ளவராக கருதுகின்றனர். கருணாநிதியும் எம்.ஜி.ஆரும் ஈழம் இயக்கத்திற்கு ஆதரவளித்த போதிலும் எம்.ஜி.ஆர். அதிகளவுக்கு பிரபாகரன் தலைமை தாங்கிய விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு பல மில்லியன் ரூபாக்களை வழங்கியிருந்தார். பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகள் அமைப்பு ஏனைய தமிழ்ப் போராளிகளின் குழுவிலும் பார்க்க அதிகளவுக்கு செயற்பாட்டுத் திறனுடையதாக விளங்கும் என்ற உள்ளுணர்வை அவர் கொண்டிருந்தார். எவ்வாறாயினும் இந்திய மத்திய அரசாங்கத்தின் அதிகளவிலான அதிகாரத்திற்கமைவாக 1987 ஜூலையில் இந்திய - இலங்கை உடன்படிக்கைக்கு தனது இணக்கத்தை அவர் தெரிவித்திருந்தார். சுதந்திர ஈழத்துக்கு எதிரானதாக இருந்த போதிலும் அவர் அதற்கு இணக்கத்தை தெரிவித்திருந்தார். இதற்கான நன்றியாக ராஜிவ் காந்தி தலைமையிலான இந்திய அரசாங்கம் எம்.ஜி.ஆருக்கு இந்தியாவின் அதியுயர் குடிமக்கள் விருதான 'பாரத ரத்னா' விருதை வழங்கியது. 1987 டிசம்பர் 24 இல் எம்.ஜி.ஆர். மரணமடைந்த பின்னர் 1988 இல் இந்த விருது வழங்கப்பட்டது. உடன்படிக்கைக்கு எம்.ஜி.ஆர். ஆதரவளித்திருந்த போதிலும் யாழ்ப்பாணத் தமிழர்கள் எம்.ஜி.ஆரை நடிகன் என்ற முறையிலும் உண்மையான அரசியல் நண்பனாகவும் தொடர்ந்து கௌரவமளித்து வருகின்றனர். வடக்கில் தமிழ் மக்களின் பகுதிகளில் எம்.ஜி.ஆரின் சிலைகள் ஆங்காங்கு காணப்படுகின்றன.

> **இலங்கைத் தமிழர்கள் எம்.ஜி.ஆரை அவரின் தமிழக அரசியல் எதிராளி மு. கருணாநிதியுடன் ஒப்பிடும் போது அதிகளவுக்கு இதயசுத்தியுள்ளவராக கருதுகின்றனர். கருணாநிதியும் எம்.ஜி.ஆரும் ஈழம் இயக்கத்திற்கு ஆதரவளித்த போதிலும் எம்.ஜி.ஆர். அதிகளவுக்கு பிரபாகரன் தலைமை தாங்கிய விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு பல மில்லியன் ரூபாக்களை வழங்கியிருந்தார். பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகள் அமைப்பு ஏனைய தமிழ்ப் போராளிகளின் குழுவிலும் பார்க்க அதிகளவுக்கு செயற்பாட்டுத் திறனுடையதாக விளங்கும் என்ற உள்ளுணர்வை அவர் கொண்டிருந்தார்**

நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்

Virakesari [20/1/17]

# எம்.ஜி.ஆர். ஈழத்தவர்களுக்கும் சரிசமனாக சொந்தமானவர் என்பதில் சந்தேகம் கிடையாது

## யாழ்.இந்திய துணைத் தூதுவர் ஆர்.நட்ராஜன்



(ப.தர்மினி)

எம்.ஜி.ஆர். ஈழத்தவர்களுக்கும் சரிசமனாக சொந்தமானவர் என்பதில் எந்த சந்தேகமும் கிடையாது எனத் தெரிவித்தார் யாழ். இந்திய துணைத் தூதுவர் ஆர்.நட்ராஜன்.

எம்.ஜி.ஆர். இன் 100ஆவது பிறந்த தின நிகழ்வு ஈழத்து எம்.ஜி.ஆர். சுந்தரலிங்கம் தலைமையில் கல்வியங்காட்டில் இடம்பெற்றபோது பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழக முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். இலங்கையில் பிறந்து இந்தியாவில் வாழ்ந்தாலும் எம்.ஜி.ஆர் உங்களுக்கும் சரிசமனாகச் சொந்தம் என்பதில் எந்தவித சந்தேகமும் கிடையாது. ஈழத்து எம்.ஜி.ஆர். சுந்தரலிங்கம் யாழ்ப்பாணத்தில் அவரது சொந்த செலவில் எம்.ஜி.ஆருக்கு சிலை அமைத்து அவரைப் போலவே வாழ்ந்து வருகின்றார் என்பது மிகவும் மகிழ்ச்சி தருகிறது.

அதுமட்டுமன்றி நாம் எப்படி எம்.ஜி.ஆரை கொடை வள்ளல் வாரி வள்ளல் என்றெல்லாம் அழைக்கின்றோமோ அதே போன்று சுந்தரலிங்கமும் இவ்வளவு எளிமையாக இருந்தாலும் அவர்கள் முடிந்த உதவிகளை இங்குள்ளமக்களுக்கு செய்து வருகின்றமை மகிழ்ச்சியாகவுள்ளது. பெருமிதம் இன்றி எடுத்துக்காட்டாகச் செயற்பட்டு வருகின்றார். இவர் எங்களை கௌரவிப்பது பெருமையாக உள்ளது.

எம்.ஜி.ஆர். இன் 100 ஆவது பிறந்த தினத்தில் ,எல்லோரும் கூடி இருக்கின்றோம். இந்த வேளையில் அவரைப் பற்றி சொல்வது என்றால் நாள் முழுக்க சொல்லிக் கொண்டு இருக்கலாம். அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரம் போல சொல்லச் சொல்லக் குறையாத சுவாரஸியமாக இருக்கும். வாழ்க்கை நமது புரட்சித் தலைவருடையது. இன்று தமிழ் சினிமாவிலும் அரசியலிலும் சரித்திரம் படைத்து தன் வாழ்க்கையில் எண்ணற்றவர்களை இப்படி வைத்ததற்கு எம்.ஜி.ஆர் ஆல் துவக்கப்பட்டதனால்தான் அவரது வாழ்க்கை இப்படி சரித்திரம் படைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. பல சினிமாத் துறையில் இருப்பவர்களும் சரி அரசியலில் இருப்பவர்களும் சரி இந்த அற்புதமான வேளையில் சுந்தரலிங்கத்துக்கு நன்றி கூறுகின்றோம். வடமாகாணத்தில் நாங்கள் அவதானித்தது என்ன என்றால் பல இடங்களில் பாரத தந்தை எம்.ஜி.ஆரின் உருவச் சிலைகள் உள்ளன. அவற்றையெல்லாம் பார்க்கும்போது ஈழத்தமிழர்கள் அவர் மேல் எவ்வளவு மதிப்பு, மரியாதை, அன்பு வைத்துள்ளீர்கள் என்பதையிட்டு பெருமிதப்படுகின்றோம்.

எம்.ஜி.ஆர். யாழ்ப்பாணம் வந்துள்ளார். சுந்தரலிங்கத்தின் நெருங்கிய நண்பர்களாக இருந்துள்ளமையினை அவர் வைத்துள்ள புகைப்படங்கள் ஊடாக அறிந்து கொண்டோம். உங்களுடைய பெயரும் எம்.ஜி.ராமச்சந்திரன் போன்று மேலும் மேலும் சிறப்புப் பெறும் என்பதில் சந்தேகமில்லை என்றார்.

மேலும் இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக யாழ்.இந்திய துணைத் தூதுவராலய செயலாளர் ஆர்.செல்வம், வடமாகாண சபை பதில் முதல்வர் பொ.ஐங்கரநேசன் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் ஈழத்து எம்.ஜி.ஆரினால் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள் என நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு உடுபிடவைகளும் வழங்கப்பட்டன.

Ceylon Today [19/1/17]

# MGR's birth centenary celebrated in Jaffna



The 100th birth anniversary of M.G. Ramachandran, who dominated the Tamil film world as well as Tamil Nadu politics like a colossus till his death in December 1987, was observed in the North Sri Lankan Tamil town of Jaffna on Tuesday (17) with the Indian Consul General, A.Natarajan, as the Chief Guest.

The solemn function organized at the 'MGR' statue by Suntharalingam, an associate of MGR's from the time the actor-politician was shot at and injured by fellow actor and political rival M.R. Radha in 1967.

Influenced by MGR's concern for the welfare of the poorest of the poor, Suntharalingam has been distributing money and clothes to the poor of Jaffna every year to mark his idol's birthday. Sporting dark glasses like MGR, Suntharalingam is also a man of few words, who believes in doing rather than talking. He is popularly known as 'Eelamu MGR' or MGR of Eelam.

Speaking on the occasion, Indian Consul General Natarajan described MGR as Sri Lanka's gift to India because the screen and political idol was born in Kandy in Central Sri Lanka.

Referring to MGR's concern for the poor, Natarajan said that this was reflected not only on the silver screen through the roles he played, but in real life too in his long career as a political leader and a popular Chief Minister of Tamil Nadu. His 'reel' and 'real' life were the same, Natarajan said.

The Indian diplomat drew attention to the fact that MGR had shown a new way to popular film stars by entering politics and emerging as a popular leader. Ronald Reagan had become a political party leader and US President after MGR, Natarajan pointed out.

In India too, many actors became leaders subsequent to MGR, like N.T. Ramarao in Andhra Pradesh. Several stars became Members of Parliament.

Among other Jaffna dignitaries who attended the 100th-anniversary function were P. Ayngaranesan, Northern Province Minister of Agriculture, and M.K. Shivajiligam, member of the Northern Provincial Council.

*(The New Hindustan Times)*